ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2366/22 – 2024 ජනවාරි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා – 2024.01.11

*2366/22 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டம்*

*33 ஆம் பிரிவின்கீழான அறிவிப்பு*

*ச. வ. பீ /277/40*

*(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு,* தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி கே. ஏ. டி. ஆர். நிஷாந்தி ஜயசிங்க ஆகிய நான், காணி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரச காணியின் இடப்பிரதேசத்தை மேலே சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக “தொல்பொருளியல் ஒதுக்கிடம்” என இருத்தல் வேண்டுமென இவ்வறிவித்தல்மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**கே.ஏ.டி.ஆர். நிஷாந்தி ஜயசிங்க,**
தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி.

கொழும்பு,
*2023, திசெம்பர் 27.*

**அட்டவணை**

**தொல்பொருளியடல் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட பெலிகலே பாறை**

*சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் பெலிகல கோரளை/ஒத்தரப் பற்று வரகாப்பொல பிரதேச செயலாளர் பிரிவில் இல. 81* A *கும்பல்கம கிராம அலுவலர் பிரிவின் பெலிகல எனும் கிராமத்தில் அமைந்துள்ள பெலிகல பாறை எனவழைக்கப்படும் காணியின் 1998.09.10 ஆம் தேதியிடப்பட்ட நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்படட வரைபட இல.* O.P.K *இல்* (RD NO 53/24 (1/23 4A) *விளக்கப்பட்ட காணித்துண்டம் 1 இன் எல்லா பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டுகள் மற்றும் அதன் எல்லைகள் பின்வருமாறு.*

வடக்கில்: சேனாநாயக்க குடும்பம் மற்றும் உதலாகம குடும்பத்தினால் உரிமைக் கோரப்பட்ட கல் அஸ்சே ஹேன, தெம்பிலியத்த மற்றும் எத்துல்வத்தை என அழைக்கப்படும் காணி;

கிழக்கில்: சேனாநாயக்க குடும்பம் மற்றும் உதலாகம குடும்பத்தினால் உரிமைக் கோரப்படும் எத்துல்வத்த என அழைக்கப்படும் காணி, எல்ஹேன, வீதி, சேனாநாயக்க குடும்பம் மற்றும் உதலாகம குடும்பத்தினால் உரிமைக் கோரப்படும் எவஹேன என அழைக்கப்படும் காணி மற்றும் ரி. எம். சத்தியரத்னவினால் உரிமை கோரப்படும் வலவ்வத்தை;

தெற்கில்: ரி. எம். ஹீன் மெனிகே மற்றும் எல். ரூபசிங்கவினால் உரிமைகோரப்படும் வலவ்வத்தை மற்றும் எஸ். எம். குணவர்தனவினால் உரிமைகோரப்படும் உடஹவலவ்வ மற்றும் சேனாநாயக்க குடும்பம் மற்றும் உதலாகம குடும்பத்தினால் உரிமைகோரப்படும் அஸ்வெதும் எனவழைக்கப்படும் தென்னங்காணி;

மேற்கில்: சேனாநாயக்க குடும்பம் மற்றும் உதலாகம குடும்பத்தினால் உரிமைகோரப்படும் அஸ்வெத்தும எனவழைக்கப்படும் தென்னங்காணி, சேனாநாயக்க குடும்பம் மற்றும் உதலாகம குடும்பத்தினால் உரிமைக் கோரப்படும் கல் அஸ்சே ஹேன மற்றும் தெம்பிலியத்த எனவழைக்கப்படும் காணி;

ஒன்பது தசம் மூன்று மூன்று இரண்டு பூச்சியம் ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

EOG 01 - 0089